பக்கங்கள்:-18

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஐப்பசி 12 | செவ்வாய்க்கிழமை | 29.10.2024 | அதிர்வு 88

# யானை தாக்கி மூதாட்டி சாவு!

காட்டு யானை தாக்கி மூதாட்டி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் அனுராதபுரம், மகாவிலாச்சி பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது என்று மகாவிலாச்சி பொலிஸார் 05



# தமிழரசில் இருந்து என்னை வெளியேற்றவே முடியாது!

## வட்டுக்கோட்டையில் சிறீதரன் சூளுரை

"அரசியல் ரீதியான அழுத்தங்களும், நெருக்கடிகளும் நிறைந்திருக்கும் சமகாலத்தில், அவை அனைத்தையும் எதிர்கொண்டவாறு எனது அரசியல் பயணத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இருந்தவாறு தொடர்வதைப் போலவே, இனிவரும் காலங்களிலும் எனது பயணம் அமையும். கட்சியை விட்டு நான் ஒருபோதும் வெளியேறமாட்டேன். என் மீதான காழ்ப்புணர்ச்சியிலும், தமது தனிப்பட்ட இயலாமைகளின் அடிப்படையிலும் என்னை யாரும் எமது கட்சியிலிருந்து வெளியேற்றவும் முடியாது."

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார். 06

பாராளுமன்றப் பொதுத் தேர்தல் 2024

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்

யாழ். கிளிநொச்சி மாவட்டங்களின் பெருமதிப்புக்குரிய அரச சேவையாளர்களே.!

ஈழத்தமிழர்களின் இறைமை மீட்புக்கான அரசியற்களம் திறக்கப்பட்ட 2010 களில், அரச சேவையிலிருந்து அரசியற்களம் புகுந்த எனது 15 ஆண்டுகால மக்கள் பணி குறித்து தாங்கள் நன்கறிவீர்கள்.

அந்தப் பணிகளது தொடர்ச்சியின் தேவை உணர்ந்தவர்களாக, உங்களின் குரலாய் என்றும் ஒலிக்கத் தயாராயுள்ள எனக்கு மீளவும் ஆணை தாருங்கள் என்று உரிமையுடன் வேண்டிநிற்கிறேன்.

தமிழ்த்தேசியத்தின் அடையாளமான வீட்டிற்கு எதிரேயும், எனது இலக்கமாகிய ஏழிற்கு மேலேயும் நீங்கள் இடும் புள்ளடி,

இனியொரு விதி செய்யும்.

சிவஞானம் சிறீதரன்
M.Ed, B.A, PGDE (Mt), PGDEM, Sp. Tr(Ag)
மேனாள் அதிபர்-
கிளி/கோணாவில் மகாவித்தியாலயம்
கிளி/ கண்டாவளை மகாவித்தியாலயம்
கிளி/ கிளிநொச்சி மகாவித்தியாலயம்
நாடாளுமன்ற மேனாள் உறுப்பினர்,
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,
கிளிநொச்சி.

7 சிவஞானம் சிறீதரன்
இலங்கை தமிழ் அரசுக் கட்சி

# தீபாவளி கொண்டாட முடியாதளவுக்கு விலையேற்றத்தால் திண்டாடும் மக்கள்

## அநுர அரசைச் சாடுகின்றார் வேலுகுமார்



"பொருளாதாரப் போரில் இருந்து மக்களை மீட்போம் என சிவப்புத் தோழர்கள் கொக்கரித்தார்கள். ஆனால், இன்று பொருட்களின் விலைகள் எகிறியுள்ளன. தமிழ் மக்களின் பாரம்பரிய பண்டிகையான தீபாவளியைக்கூட 05

# நாட்டின் புலனாய்வுத்துறையை இந்த அரசு பலப்படுத்த வேண்டும்

## முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் வலியுறுத்து



"வீதி தடைகளையும் பாதுகாப்பு அரண்களையும் நீக்கி, பாதுகாப்பு காரணங்களுக்காக மூடப்பட்டிருந்த வீதிகளைத் திறந்து விட்டுள்ளதன் மூலம் நாடு பாதுகாப்பான நிலையில் இருக்கின்றது என அரசு நினைக்கக்கூடாது. 05




பொதுத் தேர்தல் வரும் நவம்பர் 14ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப் பட்டிருந்தாலும் அது இரண்டு தினங்கள் பிற்போடப்பட்டு நவம்பர் 16ஆம் திகதி நடைபெறக் கூடும் என்று சட்ட வட்டாரங்கள் கூறுகின்றன.

அரசமைப்பில் வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட தினத்திற்கும் வாக்களிப்பு நடைபெற வேண்டிய 05

உத்தியோகத்தர்களே உங்கள் பெறுமதியான வாக்கை தமிழரசுக் கட்சிக்கு வழங்கிடுவீர்

தமிழ் அரசு கட்சி எங்கள் சொத்து
அதனை நாமே தெரிவு செய்வோம்

இலங்கைத் தமிழரசுக் கட்சி



# யாழ்ப்பாணத்தில் தாக்குதலுக்கு இலக்கான தமிழ் மக்கள் கூட்டணியினருக்குப் பிணை!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடு பட்டிருந்தபோது வன்முறைக் கும்பலால் தாக்குதலுக்கு இலக்காகிக் காயமடைந்த தமிழ் மக்கள் கூட்டணியினரைச் சேர்ந்த மூவரைப் பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்திய நிலையில் மன்று அவர்களைப் பிணையில் செல்ல அனுமதித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை கோப்பாய் பொலிஸ் பிரிவில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் மான் சின்னத்தில் போட்டியிடும் தமிழ் மக்கள் கூட்டணியினர் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளை ஓட்டோ ஒன்றில் வந்த நால்வர் அடங்கிய கும்பல் தாக்குதலை மேற்கொண்ட பின்னர் அங்கிருந்து சென்று மீண்டும் சுமார் 30 பேருடன் வந்து பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த வர்கள் மீது தாக்குதலை மேற்கொண்டனர்.

அதில் பெண் உள்ளிட்ட மூவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், தாக்குதலுக்கு இலக்கானவர்கள் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்த நிலையில், தாக்குதலை மேற்கொண்டனர் எனக் குற்றஞ்சாட்டப்படும் தரப்பினரும் பரஸ்பர முறைப்பாட்டைப் பொலிஸ் நிலையத் தில் வழங்கியிருந்தனர்.

அதையடுத்து பொலிஸார், தாக்குதலுக்கு இலக்காகி யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த தமிழ் மக்கள் கூட்டணியின் ஆதரவாளர்களுக்கு வைத்தியசாலையில் கட்டிலுடன் கைவிலங்கிட்டு சிகிச்சைக்கு அனுமதித்தனர்.

இந்நிலையில், தாக்குதலுக்கு இலக்கான மூவர் மற்றும் தாக்குதலை மேற்கொண்டனர் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட ஐவர் என 8 பேரையும் யாழ் . நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை கோப்பாய் பொலிஸார் முற்படுத்தினர்.

அதன்போது தாக்குதலுக்கு இலக்கானவர்கள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி வி. திருக்குமரன் தலைமையில் 12 சட்டத்தரணிகள் மன்றில் தோன்றினர்.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற வழக்கு விசாரணைகளை அடுத்து, அனைவரையும் பிணையில் செல்ல அனுமதித்த மன்று, வழக்கை எதிர்வரும் ஜனவரி மாதம் 21ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

# சமத்துவக் கட்சியின் அமைப்பாளர் மீது தாக்குதல்!

ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டணியில் போட்டியிடுகின்ற சமத்துவக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளரான முன்னாள் போராளி வேங்கை மீது மற்றொரு கட்சியின் உள்ளூராட்சி சபை வேட்பாளரான ஒருவர் தாக்குதலை நடத்தியுள்ளார்.

இந்தச் சம்பவம் கிளிநொச்சி, ஸ்கந்தபுரம் சந்தியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் மு.சந்திரகுமாருக்கு ஆதரவாக ஸ்கந்தபுரம் பிரதேசத்தில் பெண்கள் பரப்புரை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது அங்கு மது போதை யில் சென்ற நபர், பரப்புரை நடவடிக்கையில் ஈடுப்பட்டிருந்த பெண்களிடம் மிகவும் அநாகரிகமான வார்த்தைகளை பயன்படுத்தி தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளார்.

இதன்போது அவ்விடத்துக்குச் சென்ற சமத்துவக் கட் சியின் அமைப்பாளர் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள் ளது.

# இலண்டனில் இருந்து வந்தவர் பஸ்ஸில் மயங்கி வீழ்ந்து சாவு

இலண்டனில் இருந்து உறவினரைப் பார்க்க யாழ்ப்பாணம் வந்தவர் மயங்கி வீழ்ந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அங்கு உயிரிழந்துள்ளார்.

கணேசராசா தியாகராசா (வயது - 56) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

யாழ்.கல்வியங்காட்டிலுள்ள உறவினரைப் பார்ப்பதற் காக இலண்டனிலிருந்து வந்த அவர், கடந்த 17ஆம் திகதி பஸ்ஸில் சென்றுள்ளார்.

பஸ்ஸில் மயங்கி வீழ்ந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணையை யாழ்ப்பாணம் போதனா மருத்து வமனையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிடப்பட் டது.









# பழுகாமத்தில் சாணக்கியனுக்கு அமோக வரவேற்பு

மட்டக்களப்பு, பட்டிருப்பு தொகுதிக்குட்பட்ட பழுகாமத்தில் நேற்று திங்கட்கிழமை தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் இரா. சாணக்கியனின் பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது.

இதன்போது சாணக்கியனுக்கு அமோக வரவேற்புடன் பாரிய ஆதரவு அந்த ஊர் மக்களால் வழங்கப்பட்டது.

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பான தமிழரசுக் கட்சியின் விசேட பரப்புரைக் கூட்டங்களுக்கு இவ்வாறாக மக்கள் அணிதிரண்டு வந்து தங்களது பேராதரவுகளைத் தெரிவித்து வருகின்றார்கள் என்று சாணக்கியனின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.












# சீரற்ற வானிலையால் 8 மாவட்டங்கள் பாதிப்பு

வடக்கு, வடமத்திய, வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை, அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் மணித்தியாலத்திற்கு 40 கிலோமீற்றர் வேகத்தில் காற்று அதிகரித்து வீசக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் ஏற்படும் ஆபத்துக்களைத் தடுப்பதற்குத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் பொது மக்களை அறிவுறுத்தியுள்ளது.

இதனிடையே, நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக 8 மாவட்டங்கள் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளன.

இதன்படி, யாழ்ப்பாணம், திருகோணமலை, மன்னார், பதுளை, கேகாலை, புத்தளம், காலி மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களே இவ்வாறு பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளன.

குறித்த மாவட்டங்களில் 3,511 குடும்பங்களைச் சேர்ந்த 12,860 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன், சீரற்ற வானிலை காரணமாக நாடளாவிய ரீதியில் 77 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

இந்த நிலையில், நாடளாவிய ரீதியில் 89 குடும்பங்களைச் சேர்ந்த 302 பேர் தற்காலிக முகாம்களில் பாதுகாப்பாக தங்கவைக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

# நாட்டரிசிக்கு தட்டுப்பாடு இல்லை; விவசாய அமைச்சு அறிவித்தது



ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய முன்னெடுக்கப்பட்ட அரிசி மற்றும் நெல் கையிருப்பு தொடர்பான தரவுகளின் அடிப்படையில் நாட்டரிசிக்குத் தட்டுப்பாடு இல்லை எனத் தெரியவந்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த விவசாய அமைச்சின் செயலாளர் எம்.பீ.என்.எம்.விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு ஏற்ற வகையில் சந்தையில் அரிசி விலையைத் தீர்மானிக்கும் சக்தியை அரசாங்கம் அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு ஒரு போதும் வழங்காது எனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த நாள்களில் கட்டுப்பாட்டு விலைக்கும் அதிக விலையில் அரிசி சந்தையில் விற்பனை செய்யப்பட்டமையால் அதற்குத் தட்டுப்பாடு நிலவியது.

இதன் காரணமாக மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகியிருந்தனர்.

இந்த நிலையில், தற்போது சந்தையில் உள்ள அரிசி மற்றும் நெல் கையிருப்பு தொடர்பான தரவுகளை அரசாங்கம் சேகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தினத்திற்கு இடையில் உள்ள காலம்பற்றித் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தக் காலக் கணக்குக்கு ஒரு நாள் முன்னதாக இப்போது பொது தேர்தல் திகதியிடப்பட்டிருப்பதாக சட்டத்துறை வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

இந்த விடயத்தை முன்னிறுத்தி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு வரும் 4ஆம் திகதி உயர் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்றது.

அரசு தரப்பு அந்தத் தவறை மனதில் ஏற்றுக்கொண்டு, இரண்டு நாள்கள் தேர்தலைப் பின் தள்ளுவதற்கு இணங்க வாய்ப்புகள் இருக்கின்றன என இப்போது தகவல்கள் கசிகின்றன.

14ஆம் திகதி வியாழக்கிழமை வாக்களிப்பை தீர்மானிப்பதற்கு பதிலாக வழமை போன்று சனிக்கிழமையன்று – 16ஆம் திகதிக்கு – அதனை நடத்த ஒழுங்குபடுத்தி இருந்தால் அது அரசமைப்பு குறிப்பிட்ட கால அவகாசத்தை வழங்குவதாக இருந்திருக்கும் எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

நவம்பர் 15 ஆம் திகதி பௌர்ணமி தினம். விடுமுறை நாள். ஆகையால் அடுத்த நாள் 16ஆம் திகதி தேர்தலை நடத்த இணக்கம் வரலாம் என்று நம்பப்படுகின்றது. அப்படி இணங்கினால் இரண்டு நாள் தேர்தல் பிற்போலப்படுகின்ற நிலைமை ஏற்படும்.

+ + +

தேங்காய் விலை இரட்டிப்பாகிக் கொண்டிருக்கின்றது. அதேபோல விரைவில் அரிசி விலையும் எகிறும் என்று சம்பந்தப்பட்ட தரப்புகள் எச்சரிக்கின்றன.

பொதுத் தேர்தலுக்கிடையில் அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிப்பு திடீரென ஏற்படக் கூடிய சாத்தியங்கள் தென்படுகின்றன.

அப்படி நேர்ந்தால் அது ஆளும்தரப்பின் வெற்றியைப் பெரிதும் பின் தள்ளும் என்று கருதப்படுகிறது.

வாக்களிப்பு முடியும் வரையாவது விலைவாசி உயராமல் கட்டுப்படுத்த ஜனாதிபதி தீவிர முயற்சியும் கவனமும் எடுத்துள்ளார் என அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அது இயலுமா என்பதைப் பார்ப்போம்.

+ + +

ஆட்சி மாறினாலும் காட்சியும் கோலங்களும் மாறுவதில்லைப் போலும்.

பொதுத் தேர்தல் காலத்தில் அரசியல் நியமனங்கள், புதிய பொறுப்பு வழங்கல் போன்றவை தவிர்க்கப்பட வேண்டும் என்பதே பொதுவான விதி.

ஆயினும், ஜனாதிபதித் தேர்தலில் அதிகாரம் கை மாறியதும், ஒரு புறம் நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தலுக்கு உத்தரவிட்ட ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, தேர்தல் கூளேபரங்களுக்கு மத்தியில் மறுபுறத்தில் புதிய நியமனங்களைத் தன் இஷ்டப்படி வாரி வழங்கி வருகின்றார்.

தேர்தல் அறிவிக்கப்பட்ட சூழலில் பனை அபிவிருத்திச் சபைக்கு தலைவர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

தமிழ் மக்களுக்கு அதிகம் தெரிந்தவரான செல்வின் இரேனியஸ் மரியாம்பிள்ளை இப்பதவிக்கு நியமிக்கப்பட்டு, அவர் பதவியை ஏற்று ஒரு வார காலம் முடிவதற்குள், அவரை இறக்கிப் புதியவர் ஒருவரை நியமித்திருக்கின்றது அநுரகுமார திஸநாயக்கவின் ஆட்சிப் பீடம்.

புதிய ஜனாதிபதிக்கு – அவரின் கட்சிக்கு – விசுவாசமானவர் என்ற அடிப்படையில் விநாயகமூர்த்தி சகாத்வன் என்பவர் இப்போது கடந்த 22 ஆம் திகதி முதல் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டிருக்கின்றார் என்று கூறப்படுகின்றது.

பனை அபிவிருத்தி சபையின் தலைவர் பதவிக்கு தன்னை ஏன் நியமித்தார்கள், பிறகு தன்னை ஏன் அப்பதவிலிருந்து ஒரு வாரத்துக்குள் விலக்கினார்கள் என்பவை தெரியாமல் செல்வின் தடுமாறுகின்றார் என விடயம் அறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

ஆக, நாட்டில் ஆட்சி பீடம் மாறினாலும் அரசின் காட்சியும் கோலமும் மாறவில்லை என்பது தெளிவாகின்றது.

---

## நாட்டின் புலனாய்வுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பாதுகாப்பு அரண்களை அகற்றுவதாக இருந்தால் நாட்டின் புலனாய்வுத்துறையை இந்த அரசு அரசு பலப்படுத்த வேண்டும். அத்துடன் இந்த நாடு சுவிசர்லாந்து அல்ல என்பதைப் பிரதமர் ஹரிணி புரிந்துகொண்டிருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம்.”

– இவ்வாறு முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அதிகாரத்துக்கு வந்ததுடன் நாட்டின் பாதுகாப்பைக் கருத்தில்கொண்டு பல வருட காலமாக மூடப்பட்டிருந்த வீதிகள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. அங்கு வைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு அரண்கள் அகற்றப்பட்டன.

இதன் மூலம் நாட்டின் பாதுகாப்பு உறுதியாகி இருக்கின்றது என அரசு சிறுபிள்ளைத்தனமாக நினைத்துவிடக்கூடாது. தேசிய பாதுகாப்பு என்பது மிகவும் விஸ்தீரமானதாகும்.

அதனால் பாதுகாப்பு கருதி மூடப்பட்டிருந்த வீதிகளை மீண்டும் திறப்பதாக இருந்தால் எமது புலனாய்வுத்துறையைப் பலப்படுத்த வேண்டும். அவர்களின் மன நிலையை உயர்ந்த மட்டத்தில் வைக்க வேண்டும்.

ஆனால், எமக்குக் கிடைத்த தகவலுக்கமைய எமது புலனாய்வுத்துறையினரின் மனநிலை வீழ்ச்சியடைந்திருக்கின்றது. அவர்கள் தொடர்பில் அரசு கவனம் செலுத்த வேண்டும்.

புலனாய்வுப் பிரிவின் பிரதானி ஜெனரல் சுரேஸ் சலேயை அந்தப் பதவியில் இருந்து உடனடியாக நீக்கி இருப்பது குறித்து நாங்கள் ஆச்சரியமடைகின்றோம்.

முக்கியமான பதவியில் இருக்கும் ஒருவரை அவ்வாறு திடீரென நீக்கக் கூடாது என்பதே எமது நிலைப்பாடு. அவருடன் தனிப்பட்ட பிரச்சினைகள் இருந்தாலும், அவருக்கு அடுத்தபடியாக அந்தப் பதவிக்கு வர இருப்பவருக்கு அவரின் அனுபவங்களைப் பெற்றுக்கொள்ள சிறிது காலம் அந்தப் பதவியில் அவரை வைத்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யப்பட்டிருந்தால், அறுகம்பே சம்பந்தமான நிலை ஏற்பட்டிருக்காது.

தனிப்பட்ட விடயங்களுக்காக நாட்டின் பாதுகாப்பைப் பலவீனப்படுத்த வேண்டாம் என அரசிடம் கேட்டுக்காள்கின்றோம். அத்துடன் எமது நாடு சுவிட்சர்லாந்து அல்ல. அதனால் பாதுகாப்பு தொடர்பில் அவதானமாகச் செயற்பட வேண்டும் எனப் பாதுகாப்புப் பிரிவினர் பிரதமருக்குத் தெரிவித்ததாகப் பிரதமர் தெரிவித்திருந்தார். இந்த நாடு சுவிட்சர்லாந்து அல்ல என்பதைப் பிரதமர் புரிந்துகொண்டதையிட்டு நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம்.

ஏனெனில் அவர்கள் எதிர்க்கட்சியில் இருக்கும் பிரபுக்களுக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு தொடர்பாகவும், அந்தப் பாதுகாப்பு தரப்பினருக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள், பாதுகாப்புக்காகச் செல்லும் வாகனம் தொடர்பாகவும் பல்வேறு குற்றச்சாட்டுக்களைத் தெரிவித்தார்கள்.

ஆனால், அந்தப் பதவிக்கு வந்த பின்னர் அந்தப் பாதுகாப்பு வழங்கப்படுவது நபருக்குஅல்ல, அந்தப்பதவிக்குஎன்பதைதற்போது பிரதமர் புரிந்துகொண்டிருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம்.

எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு எங்களுக்கு எப்படி வேண்டுமானாலும் கதைக்கலாம். ஆனால், ஆட்சி செய்யும்போது, பல்வேறு வரையறைகளுக்கு உட்பட்டே நாங்கள் செயற்பட வேண்டும் என்பதை ஜே.வி.பி. தற்போதாவது உணர்ந்துகொள்ள வேண்டும்.” – என்றார்.

---

## தீபாவளி கொண்டாட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சந்தோஷமாகக் கொண்டாட முடியாதளவுக்கு பொருளாதாரச்சுமை காணப்படுகின்றது.”

– இவ்வாறு புதிய ஜனநாயக முன்னணியின் கீழ் கண்டி மாவட்டத்தில் காஸ் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடும் நாடாளுமன்ற வேட்பாளர் எம்.வேலுகுமார் தெரிவித்தார்.

“தாங்கள் ஆட்சிக்கு வந்தால் தேனும், பாலும் பாய்ந்தோடும் நாடாக இலங்கை மாறும் என்றார்கள், அப்படி பாரிய மாற்றங்கள் ஏதும் நடந்ததாகத் தெரியவில்லை.” – என்றும் அவர் கூறினார்.

இது தொடர்பில் மேலும் கூறுகையில்,

“ரணில் விக்கிரமசிங்க ஆட்சியின் போது வழங்கப்பட்ட அஸ்வெசும கொடுப்பனவு போதாது எனவும், தாங்கள் ஆட்சிக்கு வந்தால் மக்களின் வாழ்வாதாரம் மேம்படும் எனவும் தேசிய மக்கள் சக்தியினர் கூறிவந்தனர். எனவே, அஸ்வெசுமவைவிட அதிக கொடுப்பனவு வழங்கப்படும் என மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால். அப்படி எதுவும் நடக்கவில்லை.

மக்களின் வாழ்க்கைச் சுமையும் குறையவில்லை. மாறாக நாளாந்தம் பொருட்களின் விலைகள் அதிகரித்து வருகின்றன. இதனால் பெருந்தோட்டப் பகுதிகளில் உள்ள மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தீபாவளி பண்டிகை பெருந்தோட்டப் பகுதிகளில் சிறப்பாகக் கொண்டாடப்படும். ஆனால், பொருட்களின் விலைகளைப் பார்க்கும்போது, கொண்டாடுவதை விட்டுவிட்டு திண்டாட வேண்டிய நிலையே காணப்படுகின்றது.

அதேவேளை, கட்சி, தேர்தல் அரசியலைவிட நாடுதான் முக்கியம் என்று தேசிய மக்கள் சக்தியினர் கூறி வந்தனர். ஆனால், பிரிக்ஸ் மாநாட்டுக்கு அழைப்பு விடுத்தும் ஜனாதிபதி அநுரகுமார செல்லவில்லை. இதன்மூலம் எமக்கு இராஜதந்திர ரீதியில் கிடைக்கவிருந்த பல நன்மைகள் இல்லாமல் போயுள்ளன.

நாட்டில் பொதுத் தேர்தல் நடைபெறுவதால்தான் ஜனாதிபதி போகவில்லையாம். நாட்டைவிட தேர்தல்தான் முக்கியம் எனில் அவர்கள் கூறிய மாற்றம் அதுதானா?

பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாடும் நடைபெற்றது. அதிலும் ஜனாதிபதி பங்கேற்கவில்லை. அரச தலைவர்கள் மாநாட்டுக்கு அதிகாரிகளை அனுப்புவதன் மூலம் முழு நன்மையும் கிடைக்கப்பெறப் போவதில்லை. இது தொடர்பில் சிவப்பு தோழர்கள் கூறப்போவது என்ன?” – என்று வேலுகுமார் கேள்வி எழுப்பினார்.

---

## யானை தாக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்துள்ளனர்.

அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த 71 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாயாரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி மூதாட்டி நேற்று தனது வீட்டுத் தோட்டத்துக்கு வந்த காட்டு யானையைத் துரத்த முயன்றபோது யானை தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

# தமிழரசில் இருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளராகப் போட்டியிடும் சிவஞானம் சிறீதரனுக்கு ஆதரவளிக்கும் வகையில் யாழ். வட்டுக்கோட்டைத் தொகுதியில் பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே சிறீதரன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

“பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடும்போது, கட்சி ரீதியாகவும், தனிநபராகவும் என்னை ஆத்மார்த்தமாக நேசிக்கும் மக்களின் நியாயபூர்வமான கேள்விகள், உட்கட்சி முரண்நிலைகள் குறித்தே அமைந்திருக்கின்றன.

கட்சிக்கு எதிராகவும் தெரிவு செய்யப்பட்ட தலைவராக நான் செயற்பட முடியாதவாறும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டும் பலர், கட்சியைவிட்டு நான் வெளியேறியிருக்கலாம் என்ற கருத்துக்களை முன்வைக்கின்றார்கள். அதேவேளை, என்னைக் கட்சியைவிட்டு வெளியேற்றும் கைங்கரியங்கள் முன்னெடுக்கப்படலாம் என்றும் எதிர்வுகூறுகின்றார்கள்.

என்னையும், எனது தலைமைத்துவத்தையும் நேசிக்கின்ற – விசுவாசிக்கின்ற எனது மக்களுக்கு நான் சொல்ல விரும்புவது ஒன்றுதான். எந்தச் சூழ்நிலையிலும் நான் தமிழரசுக் கட்சியை விட்டு வெளியேறப்போவதில்லை. என் மீதான காழ்ப்புணர்ச்சியிலும், தமது தனிப்பட்ட இயலாமைகளின் அடிப்படையிலும் என்னை யாரும் எமது கட்சியிலிருந்து வெளியேற்றவும் முடியாது.

தடைகள் அனைத்தையும் தாண்டி, எமது மக்கள் விரும்புகின்ற, அவர்களது மனதறிந்த மக்கள் பிரதிநிதியாக எனது அரசியல் பயணம் தமிழரசுக் கட்சியிலேயே தொடரும் என்பதை, தமிழீழப் பிரகடனம் நிறைவேற்றப்பட்ட வரலாற்று மண்ணான வட்டுக்கோட்டையில் வைத்து உறுதியோடு உரைக்கின்றேன்.” – என்றார்.
















# தேசிய கொள்முதல் ஆணைக்குழுவை பலப்படுத்தும் திட்டம் ஒன்று அவசியம்

## ஜனாதிபதி வலியுறுத்தல்

தேசிய கொள்முதல் ஆணைக்குழுவை பலப்படுத்துவதற்கான முறையான திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

தேசிய கொள்முதல் ஆணைக்குழுவின் அதிகாரிகளுடன் நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போதைய கொள்முதல் சட்டம் மற்றும் கொள்முதல் நடவடிக்கைகள் தொடர்பில் தேசிய கொள்முதல் ஆணைக்குழுவின் அதிகாரிகளுடன் இதன்போது ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க விரிவாக கலந்துரையாடினார்.

தற்போதுள்ள சட்டம் மற்றும் வழிகாட்டுதல்களின்படி கொள்முதல் பணிகள் மேற்கொள்ளப்படாமை தொடர்பில் உள்ள சிக்கல்களை அதிகாரிகள் ஜனாதிபதியிடம் முன்வைத்தனர்.

அரசாங்கத்தின் மூலதனச் செலவுகள் உட்பட அனைத்து செலவினங்களில் சுமார் 60 வீதம் முறையான கொள்முதல் செயல்முறைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்றும் ஆனால் மேற்படி கொள்முதல் செயல்பாட்டில் உள்ள குறைபாடுகள் காரணமாக, அரசாங்கத்திற்கு பாரிய நஷ்டம் ஏற்படுவதாகவும் தேசிய கொள்முதல் ஆணைக்குழுவின் அதிகாரிகள் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டினர்.

இதன் காரணமாக மோசடி மற்றும் ஊழலுக்கு அதிக வாய்ப்பு உள்ளதாக அவர்கள் மேலும் சுட்டிக்காட்டினர்.

கொள்முதல் செயல்பாட்டில் ஏற்படக்கூடிய தாமதங்கள், வெளிப்படைத்தன்மையற்ற நடைமுறைகள் மற்றும் செயற்திறன் இன்மை குறித்தும் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.

முதலீட்டாளரால் தானாக முன்வந்து சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள் மற்றும் அரச தனியார் பங்காளித்துவத்தின் கீழ் கொள்முதல் செயற்பாட்டில் உள்ள குறைபாடுகளை குறைப்பது குறித்தும் இக்கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

கொள்முதல் ஆணைக்குழுவின் அதிகாரங்களை மேலும் விரிவுபடுத்தி கொள்முதல் திட்டங்களை முறைமைப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க அதிகாரிகளுக்கு சுட்டிக்காட்டினார்.

இந்தக் கலந்துரையாடலில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, தேசிய கொள்முதல் ஆணைக்குழுவின் தலைவர் சுதர்மா கருணாரத்ன உள்ளிட்ட தேசிய கொள்முதல் ஆணைக்குழுவின் அதிகாரிகள் குழு கலந்துகொண்டனர்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# புரியாத பேச்சு இது!

கடந்த காலங்களில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு கூஜா தூக்கிய டக்ளஸை தங்களுடைய அமைச்சுகளில் சேர்த்துக்கொள்ள மாட்டோம் என தேசிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாணம் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

"அண்மையில் டக்ளஸ் தேவானந்தாவும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்காவைச் சந்தித்திருந்தார். அந்தப் படங்களை வைத்து தங்களுக்குச் சாதகமான அரசியல் நாடகங்களை டக்ளஸ் தேவானந்தா செய்து வருகின்றார்.

"அவர் மாத்திரமல்லர், சுமந்திரன், சிறீதரன் போன்றோரும் இதனையே செய்கின்றனர். கடந்த காலங்களில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு கூஜா தூக்கியவர்கள், மஹிந்த ராஜபக்ஷவினுடைய ஊழல், மோசடிகளுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் ஆதரவாக இருந்தவர்கள், மஹிந்த ராஜபக்ஷவால் கொண்டு வரப்பட்ட மக்கள் விரோதச் சட்டங்கள் அனைத்துக்கும் ஆதரவு தெரிவித்தவர்களை ஒருபோதும் எங்களுடன் இணைக்கப்போவதில்லை." - இப்படி பிமல் ரத்நாயக்க மேலும் கூறியிருக்கின்றார்.

அரசியல் கள நிலைவரங்கள், சரித்திரங்கள் தெரியாமல் பிமல் ரத்நாயக்க வடக்கே வந்திருந்து புசற்றுகின்றார் என்றுதான் தோன்றுகின்றது.

ஜனாதிபதியுடன் தொடர்பு இருப்பதைக் காட்டி அரசியல் செய்ய வேண்டிய தேவை சுமந்திரனுக்கோ சிறிதரனுக்கோ இல்லை. அப்படி இருப்பதாகக் காட்டினால் அது அவர்களின் இருக்கும் வாக்கு வங்கிக்கு சேதாரம்.

மாறாக, ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்காதான் அண்மையில் தெற்கில் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசுகையில், பொதுத் தேர்தலின் பின்னர் தம்முடன் இணைந்து செயல்பட முக்கிய தமிழ்த் தலைவர் ஒருவர் தயார் எனத் தம்மிடம் தெரிவித்தார் என்ற விடயத்தைப் பெரிய விவகாரமாக காட்டி, தமிழர் ஆதரவு தனக்கிருப்பதாக தெற்கில் படம் போட முயன்றிருக்கின்றார்.

அது மட்டுமல்ல, தமக்குள்ள சர்வதேச அழுத்தங்கள், கருத்து நிலைப்பாடுகளைச் சமாளிப்பதற்குள் ஜனாதிபதிக்குத்தான் இன்றைய நிலையில் சுமந்திரன், சிறீதரன் போன்றோருடன் ஊடாட்ட நகர்வு இருப்பதாகக் காட்ட வேண்டிய தேவை இருக்கின்றது.

அவற்றை மறந்து விட்டுப் புரட்டிப் போட்டுப் பேசுகின்றார் பிமல் ரத்நாயக்க. அப்படி ஜனாதிபதி தமிழ்த் தலைவர் குறிப்பிட்ட ஒருவர் சிறிதரனாகவோ அல்லது சுமந்திரனாகவோதான் இருப்பர் என்று தோன்றுகின்றது. ஆகவே இன்றைய நிலையில் ஜனாதிபதிக்குத்தான் தம்முடைய அரசியலைத் தெற்கில் செய்வதற்கு இவர்கள் இருவரும் தேவைப்படுகிறார்கள் தவிர, இவர்களுக்கு ஜனாதிபதியுடனான ஊடாட்டம் இன்றைய தேர்தல் அரசியலுக்குத் தேவை என்று கூறுவது அபத்தம்.

அடுத்தது டக்ளஸ் தேவானந்தா பற்றிய விடயம். சரித்திரம் தெரியாமல் உளறுகிறார் பிமல் ரத்நாயக்க.

மஹிந்தவுடன் மட்டுமல்ல, சந்திரிகா, கோட்டாபய, ரணில் விக்கிரமசிங்க என்று தான் அரசியல் செய்த காலங்களில் - மைத்திரி தவிர்ந்த அனைவருடனும் - சேர்ந்து பணியாற்றி இருக்கிறார் டக்ளஸ் தேவானந்தா.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்ப்புக் காரணமாக மைத்திரியின் நல்லாட்சி அரசில் அவர் சேர்ந்து பணியாற்ற முடியவில்லை தவிர, இயன்றிருந்தால் அந்த அரசுடனும் அவர் இணங்கிச் செயற்பட்டிருப்பார்.

புலிகளின் போராட்ட காலத்தில் தன்னையும் தன்னுடைய இயக்கத்தையும் பேராபத்தில் நிறுத்தித்தான் சிங்கள தலைமைகளோடு இணைந்து செயல்பட்டார் டக்ளஸ் தேவானந்தா. அவர் அரசுத் தலைவர்கள், அரசாங்கங்களோடு (Government உடன்) சேர்ந்து இயங்கினார் என்று கூறுவதிலும் பார்க்க கொழும்பு அரசுடன் (State உடன்) சேர்ந்து செயல்பட்டார் என்பதுதான் உண்மை.

இன்று ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் சக்தி டக்ளஸ் தேவானந்தா தன்னை பேராபத்தில் ஆழ்த்தி கொழும்பு அரசுக்கு ஆற்றிய பணியை தன்னுடைய குறுகிய அரசியல் லாபத்துக்காக மறந்து வேறு விதமாக பேசுகின்றது என்பதுதான் உண்மை.

கொழும்பு அரசுக்கு ஓடாய் தேய்ந்து, மாடாய் உழைத்த டக்ளஸ் தேவானந்தாவுக்கு ஆட்சி மாற்றம் வழங்கும் நன்றி கெட்ட பரிசுதான் இந்தக் கருத்துரை போலும்.

# த.வெ.க - நாம் தமிழர் கூட்டணி குறித்து விஜய் தான் முடிவெடுக்க வேண்டும்

## சீமான் தெரிவிப்பு



நாம் தமிழர் கட்சியுடன் கூட்டணி அமைப்பது தொடர்பாக விஜய் தான் முடிவெடுக்க வேண்டும் என மதுரையில் சீமான் தெரிவித்துள்ளார்.

மருதுபாண்டியர்கள் குருபூஜையை முன்னிட்டு மதுரை தெப்பக்குளம் பகுதியில் உள்ள மருது பாண்டியர்களின் சிலைகளுக்கு நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இதன் பின்னர் அவர் செய்தியாளர்களிடம் மேலும் தெரிவிக்கையில்,

”விக்ரவாண்டியில் விஜய் நடத்தும் த.வெ.க. மாநாடு மக்களிடத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் என நம்புகிறேன். ஏனெனில் புதிதாக அரசியல் கட்சி தொடங்கும் போது மக்களிடம் தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும். நாங்கள் கட்சி தொடங்கும் போது இந்தளவு ஆதரவு இருக்கவில்லை. திரை உலக புகழில் இருக்கும் போது மக்களிடம் வீச்சும், ரீச்சும் அதிகம் இருக்கும். எங்களுக்கு அப்படியில்லை.

மருதுபாண்டியர்களின் பெருமையை மூடி மறைக்கும் வகையில் இந்த நாளை மாநாட்டுக்கு விஜய் தேர்வு செய்திருக்கமாட்டார். அப்படியெல்லாம் செய்ற ஆள் விஜய் அல்ல. விஜய்யை பற்றி எனக்கு நன்றாக தெரியும். த.வெ.க. மாநாட்டு பேனரில் அண்ணா, பிரபாகரன் புகைப்படங்கள் இடம்பெறவில்லை. சேர, சோழ, பாண்டியர்களின் பேரன் தான் அண்ணா என நினைத்தும். வேலுநாச்சியாரின் பேரன் தான் பிரபாகரன் என நினைத்து இருவரின் புகைப்படங்களை விட்டிருக்கலாம். பிரபாகரனை நான் வைத்திருக்கிறேன் என நினைத்து கூட விட்டிருக்கலாம். கட்-அவுட் வைப்பது மட்டும் அரசியல் அல்ல. கருத்தியல் தான் அரசியல்.

நாம் தமிழர் கட்சி கொடி நிறத்தை தான் தவெக கொடியும் அமைந்துள்ளது. நாங்கள் புலியை வைத்திருக்கிறோம், அவர் யானையை வைத்திருக்கிறார். நம்மிடம் யானைப்படை தான் இருந்தது. வெள்ளைக்காரன் வந்த பிறகு தான் குதிரைப்படை வந்தது. நமக்கு யானை தான். அதனால் அதை விஜய் வைத்துள்ளார்.

இதுவரை வந்த கட்சிகளும் திராவிட அடையாளமான கருப்பு சிவப்பை பயன்படுத்தி வந்தன. தற்போது இது சிவப்பு மஞ்சளாக மாறியிருக்கிறது. ஒரே கொள்கை கொண்டுள்ளவர்கள் கூட்டணி சேர்ந்து தேர்தலை சந்திக்க வேண்டும் என்பதில்லை. த.வெ.க. - நா.த.க. கூட்டணி ஏற்படுமா? என்பதை காலம் தான் தீர்மானிக்கும். இது குறித்து விஜய் முடிவெடுக்க வேண்டும்.

த.வெ.க. மாநாட்டு நாளில் பிரேமலதா தே.மு.தி.க. மாநாடு குறித்து சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ளார். இது அவருக்கு பெருமையா என்பது தெரியவில்லை. இருப்பினும் அவர் சொல்வதில் உண்மை உள்ளது. மதுரையில் விஜய்காந்திற்காக உண்மையில் மக்கள் கூடினர். அதை மறுக்க முடியாது.

விஜய்யை பார்க்க வரும் கூட்டம் ஓட்டாக மாறுமா? என்பது குறித்து இப்போது எதுவும் சொல்ல முடியாது. என்ன நடக்கிறது என்பதை பொறுத்திருந்து பார்ப்போம். மதுரையில் குறைவாகவே மழை பெய்துள்ளது. இருந்தும் பாதிப்பு அதிகமாக உள்ளது. அரசு எல்லா மாவட்டங்களையும் ஒரே மாதிரி கவனத்தில் கொள்வதில்லை.” - என்றார்.



# மீனவர்களின் சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வு எப்போது?

## அன்புமணி ராமதாஸ் கேள்வி

தமிழக மீனவர்கள் மேலும் 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர்களை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை தேவை என்றும் பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்.

“நாகை மாவட்டத்திலிருந்து வங்கக்கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்கள் 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் பயணித்த மீன்பிடி படகும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இலங்கைக் கடற்படையினரின் இந்த தொடர் அத்துமீறல் கண்டிக்கத்தக்கது.

மீனவர்கள் சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி உள்ளிட்ட அமைப்புகள் வலியுறுத்தி வரும் நிலையில், அதுகுறித்து விவாதிப்பதற்காக மீனவர்கள் நலனுக்கான இந்திய , இலங்கைக் கூட்டுப் பணிக்குழுவின் கூட்டம் நாளை இலங்கைத் தலைநகர் கொழும்பில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய சூழலில் தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படை கைது செய்வது எத்தகைய அணுகுமுறை? என்பது தெரியவில்லை. மீனவர்கள் சிக்கலுக்கு தீர்வு கண்டுவிடக்கூடாது என இலங்கை நினைக்கிறதோ? என்ற ஐயத்தை இந்த நிகழ்வு காட்டுகிறது.

இன்றைய சூழலில் மீனவர்கள் கைது செய்யப்படும் சிக்கலுக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பது தான் தலையாயத் தேவை ஆகும். இதை கருத்தில் கொண்டு கைது செய்யப்பட்ட மீனவர்களை, அவர்களின் படகுடன் உடனடியாக விடுதலை செய்வதற்கும், நாளை நடைபெறவுள்ள இந்திய, இலங்கைக் கூட்டுப் பணிக்குழுவின் கூட்டத்தில் மீனவர் சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வு காணவும் மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.” - என்று குறிப்பிட்டுள்ளார்.



# லெபனான் மீதான இஸ்ரேலின் தாக்குதலில் 19 பேர் உயிரிழப்பு

லெபனான் மீது இஸ்ரேல் மீண்டும் தாக்குதல் நடத்தியதில் 19 பேர் உயிரிழந்தனர்.

லெபனான் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் ஹெஸ் புல்லா பயங்கரவாதிகள் உட்பட இதுவரை மொத்தம் 2,672 பேர் உயிரிழந்ததுடன், சுமார் 12,500 பேர் காயமடைந்துள் ளனர் என வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இஸ்ரேல் – ஹமாஸ் இடையேயான போரில் ஹமாஸ் ஆயுதக் குழுவினருக்கு ஏமனில் செயல்பட்டு வரும் ஹவுதி கிளர்ச்சியாளர்களும், லெபனானில் செயல்பட்டு வரும் ஹெஸ்புல்லா பயங்கரவாதிகளும், ஈராக்கில் செயல்பட்டு வரும் பயங்கரவாத அமைப்பினரும் ஆதரவு அளித்து வருகின்றனர்.

இந்த அமைப்புகள் இஸ்ரேல் மீது அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றன. இந்த தாக்குதல்களுக்கு இஸ்ரேல் தக்க பதிலடி கொடுத்து வருகின்றது.

குறிப்பாக, லெபனானுக்குள் புகுந்து இஸ்ரேல் இராணுவம் அதிரடி தாக்குதல் நடத்தி வருவதாகவும் வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.







# ஈரானியத் தலைவரின் எக்ஸ் கணக்கு முடக்கம்!

ஈரானின் உயர் தலைவர் அயதுல்லா அலி கமேனியின் எக்ஸ் கணக்கு முடக்கப்பட்டுள்ளது.

ஹீப்ரு மொழியில் அவர் பதிவிட்ட பதிவுகள் காரணமாக எக்ஸ் கணக்கு முடக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

சமூக வலைத்தளங்களில் இஸ்ரேலுக்கு எதிராக பல்வேறு கருத்துக்களை கமேனி தெரிவித்து வருகிறார்.

ஈரானுக்கு எதிரான இஸ்ரேலின் வான்வழித் தாக்குதலைக் குறைத்து மதிப்பிடக் கூடாது என்றும் ஈரான் தாக்குதல்களை அற்பமானவை எனவும் இஸ்ரேல் நிராகரிப்பது சரியல்ல என்றும் அவர் தனது எக்ஸ் பதிவில் குறிப்பிட்டிருந்தார்.

# ஜோர்ஜியாவில் தேர்தல் சட்ட மீறல் சம்பவங்கள்

## விசாரணைக்கு அழைப்பு

ஜோர்ஜியாவில் இடம்பெற்ற பொதுத் தேர்தலில், தேர்தல் சட்டம் மீறப்பட்ட சம்பவங்கள் தொடர்பான முழுமையான விசாரணைகளுக்கு அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் அழைப்பு விடுத்துள்ளன.

கடந்த சனிக்கிழமை ஜோர்ஜியாவில் இடம்பெற்ற தேர்தலில் வாக்கெடுப்பு சர்ச்சைக்குரிய வகையில் இடம்பெற்றுள்ளதாக அந்த நாட்டின் ஜனாதிபதி குற்றம் சுமத்தியுள்ளார்.

ரஷ்யாவுடனான கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட ஆளும் கட்சிக்கும் ஐரோப்பாவுடனான கொள்கைகளை ஒருங்கிணைப்பதை நோக்கமாகக் கொண்ட எதிர்க்கட்சிக்கும் இடையே கடும் போட்டி நிலவியது.

மேற்படி தேர்தல் முடிவுகளில் ஆளும் கட்சி வெற்றி பெற்றதாக தேர்தல் ஆணைக்குழு அறிவித்தமைக்கு எதிராக பொதுமக்களை வீதிகளில் இறங்கி போராடுமாறு அந்த நாட்டு ஜனாதிபதி சலோமி சௌராபிச்விலி வலியுறுத்தினார்.

இவ்வாறான பின்னணியில் அமெரிக்காவும், ஐரோப்பிய ஒன்றியமும் தேர்தல் சட்டம் மீறப்பட்ட சம்பவங்கள் தொடர்பான முழுமையான விசாரணைகளுக்கு அழைப்பு விடுத்துள்ளன.









# எமில்காந்தனின் அலுவலகம் திறப்பு

(கி.வசந்தன்)

வவுனியா – தரணிக்குளம் பகுதியில் எமில்காந்தனின் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னித் தேர்தல் தொகுதியில் எமில்காந்தன் தலைமையிலான சுயேச்சைக் குழு – கோடரி சின்னத்தில் போட்டியிடுகின்றது.

இந்நிலையில் கட்சியின் வேட்பாளர்கள் மூன்று மாவட்டங்களில் மக்கள் சந்திப்புகளை முன்னெடுத்து வருவதுடன், தரணிக்குளத்தில் அலுவலகம் ஒன்றும் திறந்து வைக்கப்பட்டது.

அத்துடன், வவுனியா விளாத்திக்குளம், தாலிக்குளம், வீரபுரம், தரணிக்குளம் ஆகிய பகுதிகளில் முதன்மை வேட்பாளர் மற்றும் வேட்பாளரான ஆசிரியர் சிவராசா ஆகியோரும் பிரச்சாரக் கூட்டங்களை நடத்தினர்.

மேலும், முல்லைத்தீவில் கைவேலி, உடையார்கட்டு, முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு ஆகிய பகுதிகளில் எமில்காந்தன் மற்றும் ஜீவபிரபு ஆகிய வேட்பாளர்கள் பிரச்சாரக் கூட்டங்களை நடத்தினர்.

இதில் மக்கள் பலர் கலந்துகொண்டு தமது ஆதரவைத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.












# கடவுச்சீட்டு டோக்கன் பெற மீண்டும் நீண்ட வரிசைகள்

பத்தரமுல்லையில் அமைந்துள்ள குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திற்கு முன்பாக மக்கள் மீண்டும் நீண்ட வரிசையில் நின்று கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்கின்றனர்.

வெளிநாட்டுக் கடவுச்சீட்டுகளைப் பெற மீண்டும் டோக்கன் வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

அதிகாலை முதலே நீண்ட வரிசைகள் உருவாகியுள்ளதாகவும், பலர் அதிகாலை 4 மணிக்கே குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திற்கு முன்பாக வந்து வரிசையில் காத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் கடந்த காலங்களில் வெளிநாட்டுக் கடவுச்சீட்டுகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பான நெருக்கடி நிலை ஏற்பட்டிருந்ததுடன், புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வருவதன் மூலம் அந்த நெருக்கடி முடிவுக்கு வரும் என வெளிவிவகார அமைச்சர் அறிவித்தார்.

எவ்வாறாயினும், தற்போதைய அரசாங்கத்தினால் இந்த நெருக்கடிக்கு உரிய தீர்வை இதுவரை வழங்க முடியவில்லை என மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.



# சுற்றுலாப் பயணிகள் வருகையில் எவ்வித வீழ்ச்சியும் ஏற்படவில்லை

அமெரிக்கா மற்றும் பிரித்தானியா உள்ளிட்ட சில நாடுகள் இலங்கைக்கான தங்களது பயண ஆலோசனைகளைப் புதுப்பித்திருந்த போதிலும், சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்வரும் மற்றும் வெளிச் செல்வதற்கான பயண முகவர் சங்கத்தின் தலைவர் நளின் ஜயசுந்தர இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், எதிர்காலத்தில் முன்பதிவுகள் இரத்துச் செய்யப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாகவும் அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

இந்த நிலையில், நாடு மற்றும் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து தூதரகங்களுக்கு தெளிவுபடுத்தும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் நளின் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.




# பொதுத் தேர்தல் தொடர்பில் 869 முறைப்பாடுகள் பதிவு

பொதுத் தேர்தலுடன் தொடர்புடைய குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இதுவரையில் 869 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி தேர்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் 845 முறைப்பாடுகளும், வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 8 முறைப்பாடுகளும், ஏனைய குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் 16 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கிடைக்கப்பெற்ற 869 முறைப்பாடுகளில் 723 முறைப்பாடுகள் தீர்க்கப்பட்டுள்ளதுடன், 146 முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# இலங்கைக்குள் பிரவேசிப்பதற்கு அமெரிக்கர்களுக்கு தடையில்லை

## தூதுவர் ஜூலி சங் தெரிவிப்பு




இலங்கைக்கு பிரவேசிப்பதற்கு அமெரிக்க பிரஜைகளுக்கு எந்தவகையிலும் தடை விதிக்கப்படவில்லை என இலங்கையிலுள்ள அமெரிக்க தூதுரகம் அறிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற விசேட நிகழ்வொன்றில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைத்த போது அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அறுகம்பை பகுதியில் பயங்கரவாத அச்சுறுத்தல் நிலவுவதாக எமக்கு தகவல்கள் கிடைத்தவுடன் அவற்றை இலங்கை அதிகாரிகளுடன் பகிர்ந்து கொண்டோம்.

அதற்கு அவர்களும் உரிய வகையில் பதிலளித்திருந்த நிலையில், நாம் அவர்களுடன் மிகுந்த ஒத்துழைப்புடன் செயற்பட்டிருந்தோம்.

இலங்கை ஜனாதிபதியுடனான உறவினையும் பாதுகாப்பு தரப்பினரின் செயற்பாடு மற்றும் வெளிப்படைத்தன்மை தொடர்பான அர்ப்பணிப்பையும் அமெரிக்கா பாராட்டுகிறது.

அதேபோல, இலங்கைக்குப் பிரவேசிக்க வேண்டாம் என அமெரிக்கப் பிரஜைகளுக்கு எந்தவகையிலும் பயணத் தடை விதிக்கப்படவில்லை.

மறு அறிவித்தல் வரை அறுகம்பை பகுதிக்கு சுற்றுலா செல்வதை தவிர்க்குமாறே அமெரிக்க பிரஜைகளுக்கான பயண ஆலோசனை கடந்த வாரம் திருத்தப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், கடந்த பல வருடங்களாக இருந்ததை போல முழு இலங்கைக்குமான பயண ஆலோசனை தொடர்ந்தும் 2 ஆவது மட்டத்திலேயே பேணப்படுகிறது.

மாலைதீவு, பிரான்ஸ், இத்தாலி போன்ற நாடுகளுக்கான பயண ஆலோசனையையும் இதே மட்டத்திலேயே அமெரிக்கா பேணி வருகின்றது” – என்றார்.

# நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தார் நாமல்






நாட்டில் மீண்டும் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய பட்டியல் வேட்பாளர் நாமல் ராஜபக் ஷ தெரிவித்துள்ளார்.

ஹட்டனில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்காக வெளிநாட்டு அலுவலகங்கள், தூதரகங்கள் மற்றும் சர்வதேச புலனாய்வு அமைப்புகளுடன் கலந்துரையாடுமாறு ஜனாதிபதியிடம் அவர் கேட்டுக் கொண்டார்.

அதற்கான பொறுப்பு தற்போதைய அரசாங்கத்திற்கு உள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் புலனாய்வுத் துறை, இராணுவம் மற்றும் பொலிஸாரை பலப்படுத்தினால் இவை அனைத்தையும் எதிர்கொள்ள முடியும் எனவும் நாமல் ராஜபக் ஷ குறிப்பிட்டுள்ளார்.

## சட்டவிரோத பிரச்சாரம்; 100 சந்தேக நபர்கள் கைது



சட்டவிரோத தேர்தல் பிரச்சார செயற்பாடுகள் தொடர்பில் 100 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த இரண்டு வார காலப்பகுதிக்குள் 39 சம்பவங்கள் தொடர்பில் மேற்படி சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் காலப்பகுதிக்குள் 8 லட்சத்திற்கும் அதிகமான சட்டவிரோத சுவரொட்டிகள் மற்றும் கட்அவுட்கள் அகற்றப்பட்டுள்ளன.

சட்டவிரோத சுவரொட்டிகள், பதாகைகளை அகற்றுவதற்காக 1592 தொழிலாளர்கள் நாடளாவிய ரீதியில் கடமையில் இணைக்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.



## குறைவடைந்தது முட்டை விலை

கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் உள்நாட்டு சந்தையில் முட்டை விலை குறைவடைந்துள்ளது.

நேற்று சிவப்பு முட்டையின் விலை 36 ரூபாவாக பதிவாகியிருந்தது.

வெள்ளை முட்டையின் விலை 35 ரூபாவாக பதிவாகியிருந்தது என அகில இலங்கை முட்டை வர்த்தகர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

## பிரதான மார்க்கத்திலான ரயில் சேவைகள் பாதிப்பு




அனைத்து ரயில் மார்க்கங்களிலும் ரயில் போக்குவரத்து தடைப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

கோட்டை மற்றும் மருதானை ரயில் நிலையங்களுக்கு இடையே ரயில் ஒன்று தடம் புரண்டதால் பிரதான மார்க்கத்தின் ரயில் சேவைகள் நேற்று தடைப்பட்டன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று காலை கொம்பனிதெரு ரயில் நிலையத்தில் ரயில் ஒன்று தடம் புரண்டது.

இந்தநிலையில், மேற்படி ரயிலை மீள தரமேற்றி அதனை, மருதானை ரயில் முனையத்துக்குக் கொண்டு செல்லும் போது, மருதானை ரயில் நிலையத்துக்கு அருகில் மீண்டும் தடம் புரண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



# அடுத்த ஆண்டில் அரச பாடசாலைகளில் 181 நாள்கள் மாத்திரமே கல்வி நடவடிக்கை

2025 ஆம் ஆண்டில் உரிய நாட்களின் எண்ணிக்கை அடிப்படையில் பாடசாலைகளை நடத்துவதற்கான இயலுமை காணப்படவில்லையென கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அடுத்த ஆண்டில் காணப்படும் அரச விடுமுறைகள் மற்றும் பாடசாலை ஆண்டு விடுமுறையின் பின் ஜனவரி 27ஆம் திகதி ஆரம்பிக்கப்படுகின்றமை ஆகிய காரணிகளால் அவ்வாறு உரிய நாள்களின் எண்ணிக்கை அடிப்படையில் பாடசாலைகளை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பாடசாலை கால அட்டவணை தொடர்பில் 1997ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்திற்கு அமைய ஆண்டொன்றிற்கு 210 நாள்கள் பாடசாலைகள் நடத்தப்பட வேண்டும்.

எவ்வாறாயினும், அடுத்த ஆண்டில் அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற அனைத்து பாடசாலைகளிலும் 181 நாள்கள் மாத்திரமே கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான இயலுமை காணப்படுவதாக கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அடுத்த ஆண்டில் முதலாம் தவணை பாடசாலை கல்வி நடவடிக்கைகளின் முதலாம் கட்டம் ஜனவரி 27 ஆம் திகதி முதல் ஏப்ரல் 11 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதனிடையே, 2024 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையும் அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தில் நடைபெறவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ள பொது விடுமுறை ஞாயிறு மற்றும் பருவ கால விடுமுறை தினங்களில் அனைத்து பாடசாலைகளும் மூடப்படும் எனவும் விசேட காரணங்களுக்காக ஏதேனும் ஒருநாளில் பாடசாலைகள் மூடப்படுமாயின் அந்த நாள்களுக்காக மாற்று தினங்களில் பாடசாலைகள் இடம்பெறும் எனவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

## கரவை அபிவிருத்தி ஒன்றிய தலைவர் நேற்று காலமானார்



வடமராட்சி கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவர் உபலிஸ் பொன்னம்பலம் சில நாள்கள் சுகவீனத்துக்குப் பிறகு நேற்று திங்கட்கிழமை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் காலமானார். அவருக்கு 84 வயது.

கொழும்பில் உபாலி குழுமத்தில் பல உயர்பதவிகளை வகித்த அவர் சொந்த ஊரில் உபாலி பொன்ம்பலம் என்றே அழைக்கப்பட்டு வந்தார். பதவியில் இருந்து ஓய்வுபெற்ற பின்னர் கரவெட்டியில் சமூக சேவைகளை முன்னெடுப்பதற்காக கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தை பல வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்து அவர் முன்னெடுத்த பல அபிவிருத்தி திட்டங்கள் அந்த கிராமத்தின் நிலக்காட்சியையே மாற்றிமைத்ததாகப் பலரும் வியந்து கூறுவர்.

உபாலி பொன்னம்பலம் கரவை விக்னேஸ்வரா கல்லூரியின் பழைய மாணவர்கள் சங்க கொழும்பு கிளையின் தாபகர்களில் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அவரது இறுதிச்சடங்கு இன்று செவ்வாய்க்கிழமை காலை பத்து மணியளவில் கரவெட்டியில் இடம்பெறுகிறது.

இரு மொழி புத்தக வெளியீட்டு அழைப்பிதழ்

“ வடக்கு மாகாண நீர் வளங்களும் அவற்றின் பயன்பாட்டு உத்திகளும் பங்கீட்டுக் கொள்கையும் – Northern Province Water Resources and their Utilization Policy and Strategies”

காலம் :- புதன்கிழமை (30.10.2024)
நேரம் :- மாலை 4:30
இடம் :- தந்தை செல்வா, கேட்போர் கூடம், யாழ்ப்பாணம்.
(யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு அருகில்)

தலைமை
பேராசிரியர். பொ. பாலசுந்தரம்பிள்ளை

பிரதம விருந்தினர்
கௌரவ. நா. வேதநாயகன்
வடக்கு மாகாண ஆளுநர்

நூல் ஆய்வு
எந்திரி. வே. இரகுநாதன் முன்னாள் செயலாளர் புனர்வாழ்வு அமைச்சு
பேராசிரியர். சு. ராஜதுரை முன்னாள் பீடாதிபதி, விவசாய பீடம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
பேராசிரியர். யோ. நந்தகோபன் பீடாதிபதி, வர்த்தக முகாமைத்துவ பீடம், வவுனியா பல்கலைக்கழகம்
திரு. க. பத்மநாதன் முன்னாள் செயலாளர், விவசாய அமைச்சு, கிழக்கு மாகாணம்

சிறப்பு விருந்தினர்கள்
திரு .இலட்சுமணன் இளங்கோவன்
பிரதம செயலாளர், வடக்கு மாகாணம்
திரு .மரியதாசன் ஜெகு
செயலாளர், விவசாய நீர் பாசன அமைச்சு
பேராசிரியர். தி. திருவரன்
பொறியியல் பீடம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம், கிளிநொச்சி
கலாநிதி. ஆ. கணேஷ்வரன்
பீடாதிபதி, பொறியியல் பீடம் யாழ்ப்பாண பல்கலைக்கழகம், கிளிநொச்சி
எந்திரி. ந. சுதாகரன்
பதில் பிரதிப் பிரதம செயலாளர், பொறியியல் சேவைகள்
கலாநிதி. பா. கேதீசன்
பொறியியல் பீடம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம், கிளிநொச்சி
கலாநிதி. ப. கதிர்காமநாதன்
பொறியியல் பீடம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம், கிளிநொச்சி
எந்திரி. த. ராஜகோபு
மேலதிக மாகாண நீர்ப்பாசன பணிப்பாளர், வடக்கு மாகாணம்

தொகுப்பாளர் – திரு.ந.ஐங்கரன்

# இன்றைய ராசி பலன்கள் - 29.10.2024




இன்று உங்கள் பொறுமையை சோதிக்கும் கடினமான சூழ்நிலை காணப்படும். அதனால் நீங்கள் சில சௌகரியங்களை இழக்க நேரும். நீங்கள் சாதகமான பலன்களைக் காண பொறுமை மற்றும் நம்பிக்கையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று அதிகப் படியான பணிகள் காணப்படும். நீங்கள் பணிகளை ஒழுங்குபடுத்தி அதன்படி திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை வெளிப் படுத்துவீர்கள். கவனமற்ற வார்த்தைகளால் உறவு பாதிக்கும். உறவில் மகிழ்ச்சி நிலவ இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. சேமிப்பதற்கான வாய்ப்பும் குறைவு.

இன்று மிதமான ஆரோக்கியம் காணப்படும். தோள் வழிப் பிரச்சினைக்கு ஆளாகலாம்.




இன்று நன்மையான பலன்கள் கிடைக்கும். வாழ்வின் நன்மை தீமை உணர்வதற்கான அனுபவ அறிவை உணரும் நாள். நற்பலனகள் காண சுமூகமான உறவை பராமரிப்பது நல்லது.

பணியிடத்தில் சவால்கள் நிறைந்திருக்கும். என்றாலும் நீங்கள் இதனை சமாளித்து நற்பெயர் பெறுவீர்கள். வளர்ச்சி காண நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டும்.

உங்கள் துணையை புரிந்து கொள்வதன் மூலம் இனிமையான வார்த்தைகளை பேச இயலும். நீங்கள் உங்கள் துணையிடம் அனுசரித்து நடந்து கொள்வீர்கள்.

இன்று பண வரவு காணப்படும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும்.

நீங்கள் ஆரோக்கியமாக ஆற்றலுடன் காணப்படுவீர்கள். ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் காணப்படாது.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும் நாள். உங்களிடம் இன்று ஆற்றலும் உற்சாகமும் நிறைந்திருக்கும். அதனால் உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். இன்று அனைத்து விதத்திலும் வெற்றி கிடைக்கும் நாள்.

இன்று புதிய வாய்ப்புகள் கிடைக்கும். இதனால் நீங்கள் மிகவும் உற்சாகமாக இருப்பீர்கள். நீங்கள் உங்கள் பணிகளை விரும்பி மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு ஒன்றாகச் சென்று மகிழ்வீர்கள்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். சீரான பணப்புழக்கம் காணப்படும்.

உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. உங்கள் இலக்குகளை அடைய நீங்கள் முழு முயற்சி எடுக்க வேண்டும். விரைவாக செயலாற்றுவதை தவிர்ப்பதன் மூலம் பாதகமான சூழ்நிலையை தவிர்க்கலாம்.ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலை அளிக்கும்.

பணியிடத்தில் உங்கள் அன்றாட பணிகளை கவனமுடன் கையாள வேண்டும். இன்று பணிகள் அதிகமாக காணப்படும்.

உங்கள் துணையுடன் தகவல் தொடர்பில் பிரச்சினை காணப்படும். ஆரோக்கியமான உறவை பாரமாரிக்க இத்தகைய பிரச்சனைகளை தீர்த்துக் கொள்ள வேண்டும்.

நிதியில் ஏற்ற இறக்கங்கள் உங்களுக்கு கவலை அளிக்கும். குறைவான பணப்புழக்கம் காரணமாக நீங்கள் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதை கடினமாக உணர்வீர்கள்.




இன்று விருப்பமான பலன்களை அடைய நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். இன்று உங்கள் செயல்களில் திருப்தி காண்பீர்கள். மந்திர ஜெபம் மற்றும் பிரார்தனை மூலம் நீங்கள் மன ஆறுதல் பெறலாம்.

பணியிடத்தில் நீங்கள் சிறந்த பலனைக் காண முறையாக திட்டமிட வேண்டும். அனுசரித்துப் போவதன் மூலம் பலன் பெறலாம்.

இனம் தெரியாத காரணத்தினால் உங்கள் துணையிடம் எரிச்சலடைய வாய்ப்பு உள்ளது. இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும். உறவில் மகிழ்ச்சி நிலவ உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும்.

உங்கள் செலவுப் பழக்கத்தில் கவனம் தேவை. சிக்கனம் கடைபிடிக்க வேண்டும். இன்று செலவுகள் அதிகரித்து காணப்படும்.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். அதனால் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பது இன்று உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் பணியில் மிகுந்த திருப்தியை உணர்வீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் நல்லாதரவு பெறும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணயுடன் நல்லுறவை பகிர்ந்து கொள்வீர்கள். நீங்கள் பரஸ்பரம் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உறவில் அன்பு வளரும்.

அதிக பண வரவு உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் மனஉறுதி காரணமாக இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். முக்கிய முடிவுகள் நல்ல பலன்களை பெற்றுத் தரும்.

உங்கள் பணியின் மூலம் நீங்கள் பல நற்பலன்களைக் காணலாம் பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

உங்களின் சகஜமான அணுகுமுறை காரணமாக உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள்.

இன்று நிதிநிலைமை மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு நிலை உயரும். இது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். அமைதியான சூழ்நிலை காரணமாக சிறப்பாக உணர்வீர்கள்.




இன்று நீங்கள் உங்கள் உணர்வுகளையும் உணர்சிகளையும் கட்டுப்படுத்த வேண்டும். இன்று நன்மையான பலன்கள் காண நீங்கள் பொறுமையுடனும் நம்பிக்கையுடனும் இருக்க வேண்டும். இதன் மூலம் உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை கவனமாக மேற்கொள்ள நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரலாம். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்காது.

சில கருத்துக்களை உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்ளும் போது கடுமையாக நடந்து கொள்வீர்கள். எனவே சகஜமாக நடந்து கொள்வது சிறந்தது.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. நீங்கள் தேவையற்ற செலவுகளை செய்ய நேரும்.

# இன்றைய ராசி பலன்கள் - 29.10.2024




இன்று வளர்ச்சி நோக்கி செயலாற்ற உகந்த நாள். உங்கள் இலக்குகளில் வெற்றி அடைய நீங்கள் உங்கள் புத்திசாலித்தனம் மற்றும் திறமையை பயன்படுத்துவீர்கள். இன்று முழுவதும் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

பணி தொடர்பான பயணம் காணப்படுகின்றது. உங்கள் பணிகளை குறித்த நேரத்திற்கு முன்பே முடித்து விடுவீர்கள்.

உங்களின் இனிமையான வார்த்தை களால் உங்கள் துணையை மகிழ்ச்சியுறச் செய்வீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு செல்வீர்கள் மற்றும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

தொலை தூரத்திலிருந்து உங்களுக்கு பணம் கிடைக்கும் அது உங்களுக்கு தக்க நேரத்தில் உதவிகரமாக இருக்கும்.




இன்று முடிவுகள் எடுக்கும் போது அமைதியும் கட்டுப்பாடும் தேவை. எந்த செயலையும் செய்வதற்கு முன் நன்றாக யோசிக்க வேண்டும்.அனுசரனையான அணுகுமுறை நன்மை அளிக்கும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. அதிகப் பணிகள் சுமையாக இருக்கும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை தவிர்ப்பது நல்லது. அகந்தைப் போக்கு உறவில் மகிழ்ச்சியை ஏற்படுத்தாது.

இன்று அதிக செலவுகள் செய்ய நேரலாம். சிக்கனம் கடைபிடிக்க வேண்டும். உங்கள் செலவுகளில் கட்டுப்பாடு தேவை.

சிறப்பான ஆரோக்கியத்திற்கு முறையான உணவு முறையை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும்.




இன்று மிகவும் துடிப்பான நாளாக அமையும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்களின் உறுதியான போக்கு மற்றும் மன உறுதி மூலம் வெற்றி காண்பீர்கள்.

சக பணியாளர்கள் உதவிகரமாகவும் ஆதரவாகவும் இருப்பார்கள். நீங்கள் சிறப்பாக செயலாற்றுவீர்கள். உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் மகிழ்ச்சி நிலவும். இருவரும் ஒருவரையொருவர் புரிந்து கொள்ள இயலும்.

பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். பணத்தை சுப காரியங்களுக்கு நீங்கள் பயன்படுத்த இயலும்.

இன்று சௌகரியங்கள் அதிகம் காணப்படும். அதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




சில குடும்ப பிரச்சினை காரணமாக கவலையுடன் காணப்படுவீர்கள். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் சிறப்பாக செயலாற்றலாம்.முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியிடத்தில் ஆக்கப்பூர்வமான பலன்கள் கிடைக்காது. இன்று கொடுக்கப்பட்ட பணிகளை முடிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணை உங்களிடம் வேறுபட்டு நடப்பதாக நீங்கள் உணர்வீர்கள். என்றாலும் நீங்கள் கவலைப்படாதீர்கள். உங்கள் துணை உங்களிடம் முழு அன்போடு இருப்பார்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். இன்றைய அடிப்படை தேவைகளைக் கூட உங்களால் பூர்த்தி செய்து கொள்ள இயலாது.




